KALAKALAPPU
MONTHLY CARTOON MAGAZINE
Editor; S. K. THEESAN (I F. Y. E.)
ஆசிரியர் : எஸ். கே. தீசன்
உதவி: C. S. பாஸ்கர்
தீபாவளி சிறப்பிதழ் 1978

# கலகலப்பு

தீபாவளி சிறப்பிதழ்


தீபாவளி திரை விருந்து
யாழ் வின்சரில்

வானொலியில் கேட்டு உங்களை
கும்மாளமடிக்க வைத்த

T. S. ராமதாஸ் T. ராஜ்கோபால்
S. செல்வசேகரன் B. H. அப்துல்கமீப்



நடித்த



முழுநீள நகைச்சுவை விருந்து

# கோமாளிகள்

மனைவி : ''என்னங்க இம்முறை தீபாவளி நல்ல கலகலப்பாக இருக்கிறதே... இதுக்கெல்லாம் ஏதுங்க பணம்?''

கணவன்: ''எடி விசரி! இம்முறை எங்கள் தோட்டத்தில் விளைந்த விளை பொருட்களையெல்லாம் கொழும்பிலுள்ள எஸ். பி. எஸ். ஏஜென்சிக்கு கொண்டுபோனேன் நல்ல விலையில் அவர்கள் விற்றுப் பக்குவமாக பணத்தைத் தந்தார்கள். பிறகென்ன கொண்டாட்டம் தானே ..



## எஸ். பி. எஸ். ஏஜன்சி

## S. P. S. AGENCY

உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்கள்
(கமிசன் ஏஜன்ட்ஸ்)

113, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு—11
போன்: 26204

அனைவருக்கும் எமது அன்பு கனிந்த
தீபாவளி நல் வாழ்த்துக்கள்

விலை 50 சதம்

நகைச்சுவை மாத இதழ்

அன்றும் ! இன்றும் !! என்றும் !!!

சவர்க்காரம் தயாரிப்பில் பிரசித்தி பெற்றவர்களாக, தரமான தயாரிப்புகளை நாடும், ஏடும் போற்ற தயாரித்து, அறப்பணிகள் பலவற்றை அன்றுடம் ஆங்காங்கே செய்து கொண்டு ஐம்பதாவது ஆண்டுக் காலத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில், தமது அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் தமது மனங்கனிந்த தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறார்கள் !

தீபச் சுடரேற்றி
தெய்வம் தொழுதிடுவோம் !
பாசக் கறை போக்கி
பாரினில் வாழ்ந்திடுவோம் !!

# மில்க் வைற் சோப்

## தொழிலகம்

த. இல: 77 கே. கே. எஸ். வீதி,
போன்: 7233 யாழ்ப்பாணம்.

தரத்தில் உயர்ந்தவை,
மில்க் வைற் தயாரிப்புக்களே !

விவசாயப் போரில் பெரும் பங்கெடுத்து
வளம் காண உழைக்கும்
விவசாய மக்களுக்கு வளமான
வாழ்த்துக்கள் !

# ஆறுமுகம் அன் கோ.

உள்ளூர் விளைபொருட்கள்
விற்பனையாளர்கள்.

கமிஷன் ஏஜண்டஸ்

தொலைபேசி: 29961

107, 4-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11

எழில் மிகு வதனங்களை
அழகிய முறையில்
வர்ணமுடன்
புகைப் படமெடுக்க
விரைந்து வாருங்கள் !

# சரவணா ஸ்ரூடியோ

வழலை வீதி,
அச்சுவேலி.

தீபத் திருநாளில்,
தீஞ்சுவை வழங்கும்
தித்திப்பு பிஸ்கட்ஸ் கொடுத்து
மகிழுங்கள்

# ஹிமாலயா பிஸ்கட்ஸ்
# HIMALAYA BISCUITS

விருந்து சிறக்க,
விருந்தினர் ருசிக்க
வாங்கிப் பாவியுங்கள் !

தென்னக்கும்பற,
கண்டி.

எழில் மிகு நங்கையரின்
இடையுடன் உறவாடும்

★ ★ ★

அழகிய
புடவைத் திணுசுகளுக்கு
இன்றே நாடுங்கள் !

# ஸ்ரீ வரதாஸ்

155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ ★ ★

போன்: 7635

அன்பு வாசகர்களே!



தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்விதழை உரிய நேரத்தில் வெளியிட முடியவில்லை. தற்பொழுது பத்திரிகை மேலும் வளர்ச்சியடைய எமது நண்பர்கள் பலர் ஊக்கமளித்து வருகின்றனர். வாசகர்கள் கடிதங்களைக் கொண்டு தான் சில திருத்த முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.

எமது முயற்சிகளுக்கு உங்கள் ஆதரவும் தொடர்ந்து வெளியிட உதவும் வர்த்தகர்களின் ஆதரவுமே தேவை.

அன்புடன்
எஸ். கே. நிசன்

* * * * * *

# காசேதான் கடவுளடா

மாப்பிள்ளை : "என்ன மாமா! கையெழுத்துப் போட்ட இறுக்கின நோட்டுகளை சீதனமாத் தந்து பேய்க்காட்டிப் போட்டியள் இபப வேறை காசு கொண்டு வந்து தாருங்கோ. இல்லையெண்டால் இப்ப வந்து, உங்கடை மேளைக் கூட்டிக் கொண்டு போங்கோ......

மாமன் : ?......!



எமது
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
இதயம் கனிந்த
கலகலப்பான
தீபாவளி
வாழ்த்துக்கள்



# ஆட்டங்கள் பல ஆடும் அம்பலத்தான்

மினியோடு செல்வாளை விரும்பவில்லை — வெறும்
மிடுக்கோடு செல்வாளை விரும்பவில்லை
கண்காட்டிச் சிரிப்பவளை விரும்பவில்லை — பல
மடல்தன்னை வரைந்தாலும் விரும்பவில்லை

பலசொத்து இருந்தாலும் விரும்பவில்லை—பாவி
சொத்தொன்று இல்லாளை விரும்பவில்லை
எம்.பி யாய் ஆவதற்கு விரும்பவில்லை — ஏழை
பணந்தனையே லஞ்சம்பெற விரும்பவில்லை

குடிமகனாய் இருந்திடவும் விரும்பவில்லை — எம்
குலம் தாழ்த்த நினைப்போரை விரும்பவில்லை
அக்கிரமம் செய்வோரை விரும்பவில்லை—அவர்தம்
தொண்டர்கள் என்பவரை விரும்பவில்லை

ஆட்டங்கள் பல ஆடும் அம்பலத்தான் பலர்
குறைகளையே மறைப்பதை நான் விரும்பவில்லை
எத்தனையோ விரும்பாத என்தனுக்குச் — சிறு
வாழ்க்கை ஒரு தூசு அதை வெறுக்கின்றேனே!

இணுவையூர் வாலி

# மாருமல் தெளிப்பதற்கு...

தீபந்தனையேற்றி பாபத்தைப் போக்கிடலாம்
பாபத்தைப் போக்கியே நல் வாழ்வினையே வாழ்ந்தி
நல்வாழ்வு நல்வாழ்க்கை வாழ்ந்து சிறப்படைய [டின்
பாரினிலே பல்வகைப் பயிர்கள் நாம் செய்திடவும்
பயிர்கள் சிறப்படைந்து நல் விளைச்சல் பெறுவதற்கு
அவற்றினையே அழித்துவிடும் கிருமிகளை அழித்திடுவீர்
பல்வகையாய் உருவெடுத்த பயிரழிக்கும் கிருமிகட்கு
சிறப்பாக, தெளிமருந்து மாருமல் தெளிப்பதற்கு
"ரோருவை" நாடிடுவீர் உங்களுக்கு உரமளித்து
பயிர்களுக்கும் உரமளிப்பர்.

— டோ

யாழ் 'விம்ஸ்' ஸ்தாபனத்தார்
தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்

உங்களுக்குத் தேவையான பொருட்களை
வாங்கவும் தேவையற்றவைகளை விற்கவும்
நாடுங்கள்

'விம்ஸ்'

5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

லவ்இன் கைலாயத் தொடர்

# உருத்திரத் தாண்டவத்தால் விபரீதம்

## உமாதேவியின் காலில் வீக்கம்

தீபாவளி விசேட தினத்தை யொட்டி நடைபெற்ற உருத்திர தாண்டவத்தில் கலந்து கொண்டு லுங்கியுடன் ஆடிய உமா தேவியைக் தடக்கிக் கீழே வீழ்ந்ததன் காரணமாக காலில் பலமாக அடிபட்டு படுக்கையில் ஓய்வு எடுத்துக்கொண்டு வருகிறுர்.

சிவபெருமான் கண்கலங்கக் கட்டிரலகே உண்ணுமல் உறங்காமல் நின்று கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## வைத்தியசாலையின் முன் கூட்டம்

சொற்ப காலத்திற்கு எவருக்குமே வரங்கள் அருளுவதில்லை என்று முடிவு செய்திருப்பதாக அறிய வருகிறது.

நவராத்திரியை அடுத்து கண்ட கண்ட உணவுகளை அன்ருடம் திருவமுது செய்து வந்ததன் காரணமாக வயிற்றுக்கோளாறும் இருப்பதாக சக்தி கூறிபிருக்கிருர்.

விசேட அனுமதி எடுத்திருப்பவர்கள் மட்டுமே பார்வையிட அனுமதியளிக்கப்படுவதாக சமீபத்தில் செய்தி யொன்று கூறுகிறது.

## குதி யுயர்ந்த செருப்புக்காரி துடை தெரியும் உடுப்புக்காரி

அன்னக்கிளி படத்தில் வரும்
"அன்னக்கிளி ஒன்னைத் தேடுது"
என்ற மெட்டு



இயற்றியது
இணுவயூர் வாலி

பாடியது
ஓர் இளமனக

"அன்னக்கிளி ஒன்ணைத் தேடு" என்றமெட்டு
ஹிப்பித்தலை 'லவ்வை' தேடுது
ஜீ சி ஈ யில் பல வருடம்
பூசணிக்காய் மேனி வாடுதே (ஹிப்)

கொலிஜ் செல்லாம் அலைந்தேன்
பஸ்ராண்டில் சுழன்றேன்
சுகி யோர்டும் மதி யோடும்
பின்னல் திரிந்தேன்
சுகாதாரப் பாட நேரம்
சுமதிக்கு லவ்லெட்டரோடும்
பஸ்ரான்டில் காத்திருக்கோன்
பதிலெழுதி வருவாளே (ஹிப்)

மதியோடு சிலநாள் சுகியோடு சிலநாள்
படிப்பில்லை துணிவில்லை அலைச்சல் பலநாள்
ரெஸ்றரென்ருல் கொப்பியடிச்சு
றிசல்ற் வந்தா குண்டடிச்சு
டியூ—ரிசுகு போகையிலே
சுமதியங்கே வருவாளோ ? (ஹிப்)

மதியென்ருலங்கே ரவியுண்டு காதல்
சுகியென்ருலவள் பின்னே விஜியேகாவல்
குதியுயர்ந்த செருப்புக்காரி
துடைதெரியும் உடுப்புக்காரி
ரியூடரிரிச்கு போகையியே
லவவரங்கு வருவாரோ? (ஹிப்)

### ஒரேவழி

பொலிஸ் இன்ஸ்பெக்டர் : கள்வனைப் பிடிக்க நான்கே நான்கு வழிகள் தான் இருக்கின்றன என்று சொல்கின்றீரே. அது என்னென்ன. வழிகள்?

பொலிஸ் உத்தியோகத்தர் : இருக்கு சோர்—கிழக்கு, மேற்கு, வடக்கு. தெற்கு

ஹிசையின்அலி எம். எஸ்·
கல்முனை 3

### கைத்தொழில்

ஒருவர் : என்ன சேர் உங்க மகன் ஏதோ கைத் தொழில் பழகிறதாகச் சொன்னீர்கள் என்ன தொழில்

மற்றவர் அதுதான் 'கராட்டி' பழகிக் கொண்டு வாருன் பாருங்கோ

— டேபு

### ஓராண்டு காலட வாழ்க

காதலி: அத்தான் காதலியின் ஞாபகார்த்தமாக சாஜஹான் தாஜமஹாலையும், சிவாஜி வசந்த மாளிகையையும் கட்டினார்கள். அது போல் என் ஞாபகார்த்தமாக நீங்கள் எதைக் கட்டுவீர்கள்.

காதலன் : அன்பே— திருமணம் நடந்து ஒராண்டு காலம் வாழ்ந்தபின் நமக்கு விவாகரத்தைப் பெற்றுத் தரும் வக்கீலுக்குப் பணம் கட்டுவேன்.

நாவல் நகர் A. S. M. பாருக்

தீபாவளி மலிவு விற்பனை
மேனகை
ரெக்ஸ்ரயில்ஸ்
Meanakai Textile
மினி, பெல்ஸ்,
கடத்தல் சாறிகள்
வாங்க சிறந்த இடம்
வயிரவர் அவன்யூ,
கயிலாயா—11

ரைம்ஸ் ஒவ் கைலாய

Times of Kailaya

பிடவைத் தினுசுகள்
றெடிமேட் உடைகள்
மற்றும் அழகுசாதன
பொருட்களையும்
மலிவான விலையில் பெற
நாடுங்கள்!
ஊர்வசி
எம்போறியம்
முனியப்பர் சந்தி,
கயிலாயா-18.

## திடுக்கிடும் செய்திகள் அடங்கிய தீபாவளி சிறப்பிதழ்!

# எலிபன்ஸ் பெல்ஸ் கேட்ட விநாயகர் விரட்டப்பட்டார்!

## பழநியில் தொண்டர்கள் முற்றுகை!

### முருகன் அனுதாபத் தந்தி

பழநி — செவ்.

தீபாவளியை முன்னிட்டு நவீன எலிபன்ற் பான்ட்ஸ், பொபி சேட்ஸ் போன்றவற்றை பிள்ளையார் கேட்டு, தந்தை சிவபெருமானிடம் அடம்பிடித்து, ஆர்பாட்டம் செய்ததை அடுத்து, கூப்பன், அறிமுக அட்டை போன்றவை பறிக்கப்பட்டு பிள்ளையார் விரட்டப்பட்டார்!

ஆர்ப்பாட்டத்தையடுத்து நடைபெற்ற சிறு கைகலப்பினால் பிள்ளையாரின் தும்பிக்கையில் சிறுகாயம் ஏற்பட்டிருக்கிறது.

மனமுடைந்த பிள்ளையார் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டி பதிவுத் தபால் போட்டுள்ளதாக எமக்கு பிந்திக் கிடைத்த செய்தி தெரிவிக்கிறது.

தம்பி, முருகன் அவசர அனுதாபத் தந்தி ஒன்றினை அனுப்பியுள்ளார்.

ஈரேழு உலகங்களுக்கும் பிள்ளையாரைத் தேடி விசேட ஒற்றர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். விநாயகரைத் தும்பிக்கையுடன் காட்டித் தருபவர்களுக்கு அல்லது தகவல் தருபவருக்கு விசேட அருள் தருவதற்கு தயாராக இருப்பதாக சிவபெருமான் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

இரண்டு நாட்கள் சிவன் இல்லத்தில் சமையல் நடைபெறவில்லை! உமாதேவியார் விவாகரத்து செய்ய இருப்பதாக ஒரு வதந்தி அடிபடுகிறது.

---

சரஸ்வதி பூசையின் போது வீணை களவு! வைரவர் புலன் விசாரணை!! பிரமா, தேவர்களிடம் முறையீடு.

விபரம் :-

அடுத்த இதழில்

---

## வள்ளிக்கு வடிவான சாறி!
## தெய்வயானையின் சொல்லையே மீறி!

### "ட்ரயல்" அட்பார் தேவையென நாரதர் கூக்குரல்!

### சோட்டியுடன் தெய்வயானை பேட்டி!

திருச்செந்தூர் — வெள்ளி

முறைப்படி மணந்த மூத்தவள் தான் இருக்க கள்ளமாய் மணந்த வள்ளிக்கு சிங்கப்பூர் நைலக்ஸ் சாறி பூலோகத்தில் இருந்து விசேடமாக கடத்தி கொடுத்திருப்பதாக ஒரு மனதையுருக்கும் முறைப்பாட்டினை சிவபெருமானிடம் தெரிவித்திருக்கிறார் தெய்வயானை.

இப் பரபரப்பான சம்பவத்தை யடுத்து, முருகன் தனது வேலைக் காணவில்லையென்று புகார் செய்திருக்கிறார்.


உடனடியாக விசேட விசாரணை கமிசன் அமைக்கும்படி கேட்டு நாரதர் கூக்குரல் இட்டதன் காரணமாக இனம்தெரியாத தேவர்கள் சிலரால் மிரட்டப்பட்டார்.

கண்ணீர் பெருக, சோட்டியுடன் பத்திரிகையொன்றிற்கு இது சம்பந்தமாக தெய்வயானை அளித்த பேட்டியில்,

தேவையேற்படும் பட்சத்தில் தான் திருச்செந்தூரில் இருந்து பழநிக்கு மாற்றம் (Transfer) எடுக்க தயாராக இருப்பதாக கூறி இருக்கிறார்.

இடையே முருகன் திடீரென தலைமறைவாகியுள்ளார் என தெரியவருகிறது.

# உங்கள் கேள்விகளும் உதவாத பதில்களும்



தீசன்

செ. செந்தில்நாதன் கொக்குவில் மேற்கு
த. இரத்தினசிங்கம்

✱ பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியென்றால் சேட்டைக்கு ?

✱ சேட்டைக்கு ஒரு செந்தில் !

வி. எஸ். கௌரிதேவி இராமநாதபுரம் கிளிநொச்சி

✱ எங்கள் ஆசிரியர் காதல் திருமணம் புரிந்தவர், ஆனால் அவர் மாணவர்களின் காதலை எதிர்க்கிறாரே! ஏன்?

✱ தான் பட்ட கஸ்டம் தன் மாணவர்களும் படக்கூடாதே என்பதற்காகத்தான்.

(பட்டால் தெரியும் பழைசும் புதிசும்)

எஸ். கிருஷ்ணகுமார்,
உடுத்துறை தெற்கு, செம்பியன்பற்று

✱ சில பெண்கள் விவசாயிகளை விவாகம் செய்ய மறுப்பது ஏன்? நாட்டின் முதுகெலும்பை மறப்பது ஏன்?

✱ குதிக்கால் செருப்புடன் தோட்டத்தினுள் இறங்கி மினியுடன் குனிந்து வேலை செய்ய முடியாதென்பதற்காக முதுகு தெரியப் போடுபவர்களுக்கு முதுகெலும்பைப்பற்றி என்ன கவலை?

சிற்ஸ்ரீஜீவா கொக்குவில் மேற்கு

✱ காதலுக்கு ஆணா பெண்ணா காரணம்?

✱ ஆண் பெண் இருவரதும் அறிவு கெட்டதனம்

✱ விவசாயத்தில் அரசியல் கலப்பு இருக்கலாமா?

✱ என்னதான் இருந்தாலும் பச்சை பச்சைதான் (அதாவது பயிர்கள் பச்சை பச்சைதான்)

கே. ஈ. கோபால் கொஸ்தாப்புறேட் கல்முனை

✱ தீசனாரே! ஈசனாரே! உங்களிடம் தங்க இடம் கேட்டால்

✱ ஐயையோ! கொஞ்ச இடம் கேட்டவர்கள் இப்போ சுவீகரிப்பு சட்டத்தில் மி(ஞ்)ச்ச இடம் கேட்கிறார்கள்.

சொந்த இடமே பறிபோக நான் விரும்பவில்லை.

(யாழ் வளாக சம்பவம் தெரியாது போலும்)

க. முத்துலிங்கம் கந்தபவனம் அல்லாரை

✱ கவலையை மறப்பதற்கு மதுவை நாடுபவன் மதுவை மறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்.

✱ 'மது வெறி' தானே! பரவாயில்லை. 'மாது வெறி' இல்லாதிருந்தால் போதும்.

ஒரு மாணவன் : என்னடா, S. S. C. சோதனை (மறுமொழிப்) பேப்பரிலை கொப்பி கட்டி வைச்சிருக்கிறாயே?

வற்றவன் : அப்பா கொண்டுவந்து தந்தாரடா

முதலாமவன் : அதென்னடா! பரீட்சார்த்திகள் இத்தாளைப் பரீட்சை மண்டபத்துக்கு வெளியே கொண்டு செல்லக் கூடாது'' எண்டு போட்டிருக்குதே!

மற்றவன் : ஓ பரீட்சார்த்திகள் வெளியிலை கொண்டு வரக்கூடாதுதான்' ஆனால் எங்கடை அப்பா றெஸ்ற் ஹோல் சுப்பர்வைசர் ஆச்சே.

முதலாமவன் : ...... !

— மிஸ்க்கே —

அ. சிவநாதன் வேலணை-5

✱ பெண்களெல்லாரும் சீதைகளாகவும், ஆண்களெல்லாரும் ராமர்களாகவும் வாழும் காலம் விரைவில் வரவேண்டுமென நான் கனவு காண்கிறேன்.

✱ இப்போ இரண்டிற்கும் இடையில் அனுமார்கள் (குரங்குகள்)தான் அதிகம் வெகு விரைவில் இராமரும் சீதையும்போலமாறுவார்கள்

செல்வி சி. மாலா கோப்பாய் தெற்கு

✱ தீசன் அண்ணை பெண்களை அதிகமாக வெறுக்கிறீயே தற்செயலாக உங்களை ஒரு பெண் காதலித்தால்...?

✱ முட்டாளைக் காதலிப்பது அவள் தலைவிதியானால் காதலிக்கட்டும்....
(அது சரி யார் அந்தப் பெண்?....)

ஆர். அமீர் ஆரியவளை, செம்பியன்பற்று

✱ தீசனரே ஆரம்பத்தில் பூமியில் வசித்த மனிதன் என்ன மொழி பேசினான்?

✱ கல்தோன்றி மண்தோன்றாக் காலமதில் முன்தோன்றி மூத்த தமிழ், விளக்கம் போதுமா?

சி. காந்தராசா அச்சுசுவேலி, வடக்கு

✱ அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். உள்ளத்திலால் காதலிப்பவர்களை முகத்தில் தெரியுமா?

✱ இல்லை திருமணத்தின்போது சீதனப் பிரச்பிரச்சினை வந்ததும் தெரியும்.

வி. வீரவாகு 393, ஹெலக் ரோட், கொழும்பு-9

✱ யாவரும் கேட்டு பின்பற்றத்தக்க நா வன்மையை நீர் பெற்றுட்டால் எப்படியிருக்கும்?

✱ நாவன்மை இருந்தால் பிறகென்ன நான் ஒரு எம்.பி.யாகலாம் (அப்புறம் எனக்கு உதவிக்கொல்லாம் எத்தனைபேர் வருவார்கள்)

க, லோகேந்திரன் 2, பவுண்டர் ரோட், மட்டக்களப்பு

கே: எஸ்.ஜே.வி., ஜி.ஜி. இவர்களில் வயதிக் பெரியவர் யார்?

ப: நீர் 'தந்தையை விட யாரைப் பெரியவராக நினைக்கிறீர்?

இ. இராதா மெரேரியா எஸ்டேட், பசற

கே: அன்புதீசனரே நான் மினிஉடை அணிந்து உமது பின்னே ஓடிவந்தால் நீர் என்ன செய்வீர்?

ப: அம் மணி! உம் மினி என்னை ஒன்றும் செய்யாது. எத்தனையோ மினி மணிகளைப் பார்த்து அலுத்துவிட்டது.

இ. தியாகன் அம்பகமுவவீதி நாவலப்பிட்டி

கே: அன்பு-பண்பு-பாசம் இதற்கு நீர் தரும் விளக்கம்?

ப: அன்பு-பண்பு கூறி எலக்சன் கேட்கலாம் வென்றபின் பாசம் என்பதை மறந்துவிட வேண்டும்.

செல்வி ச. பாமா ஓமந்தை

கே: அரும்பாகவுள்ள தமிழ் ஈழம் மலரும் காலம் எப்போது?

ப: உணர்ச்சி யெனும் உரம் பாவித்தால் பலன் கிடைக்கும் (ஆனால் கூடிர உரம் அழித்துவிடும்)

> கடந்த இதழ் கலகலப்பில் எவ்வித அனுமதியுமின்றி கேள்வி பதில் பகுதியில் இரா. இலிங்கேஸ்வரி என்பவரின் பெயரில் கேள்வி கேட்டமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.
>
> — S. S ஜீவா

## அடுத்த இதழ் கேள்வி பதில்

**பரிசுப் பணம் 15/- 10/- 5/-**

வழங்குவோர்:

| ஹிமாலயா பிஸ்கட் கம்பனி தென்னக்கும்பற கண்டி | உதவாத கேள்விகள் கலகலப்பு இணுவில் |
|---|---|

தபாலட்டையில் மாத்திரம் எட்டி அனுப்புக கூப்பனின்றி வருபவை நிராகரிக்கப்படும்

இ. இராசேகரம் உரும்பிராய்

கே: உம்மிடத்தில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால் பதில் தருவீரா?

ப: No No I Cant

S. உமாதேவி (செல்வராசா) ஏழாலை

கே: எல்லோரும் நலம் வாழ நான் பாடுவேன் தாங்கள்

ப: எல்லோரும் விரண்டோட நான் பாடுவேன்...... சரியா

மிஸ் சரோசா கிருஷ்ணபிள்ளை சங்கரத்தை மீசாலை

கே: பெண்களுக்கு கல்வி அவசியமா? கல்வியை விட கவர்ச்சி அவசியமா!

ப: கவர்ச்சியிருந்தால் கல்வியே தலைவணங்கும்

# கூன் போற் காட்டு துன்னைக் கூடாது கழட்டி எறி

அன்பிற் குரிய எந்தன்
அருமைக் காதலியே!
உன்பொற் சிலையுடலில்
உடுத்தி யிருக்கு முடை
கூன் போற் காட்டு துன்னைக்
கூடாது, களட்டி எறி!

தாலியைக் கழுத்தி லேந்தி
தாரமாகப் போகும் பெண்ணே
உன்தன் பால் கொண்ட பற்றின்
உரிமையினால் கேட்கின்றேன்!
கான் போலக் கீழ் பாகம்
காட்டுகின்ற சட்டை வேண்டாம்

ஆனந்தி! நீ யெந்தன்
அருமைக் காதலிதான்!
ஈனந்தா னென்றுன்னை
இறுக்கிப் பிடித்த சட்டை
வேணாண்டி கண்ணுக்கு
விட்டுவிடு இனி அதனை!

நானும் தானுன்னை இங்கே
நாளெல்லாம் நோக்குகின்றேன்
ஏனிந்த அயல் சட்டை
இப்படி அணிகின்றாய் நீ!
மானந்தா னுனக் கிருந்தால்
மறைத்துச் சட்டை போடு!

இடையெண்டா மச்சான்
இங்கிலாந்துக் கூசா போல்
நடையென்ன (F) பைன் மச்சான்
நல்லாத் தெரியுது பார்
தொடை யென்ன சைஸ் மச்சான்!
தொட ஆசை வருகுதடா!

ஆபாசச் சட்டை யென்று
அரசாங்கம் தடுத்த போதும்,
ஓ! பாசக் காதலி நீ
ஒய்யாரம் உனக் கேண்டி;
சீமோசச் சட்டையாலே,
சீரழிந்த வாழ்வு போதும்!

மினிகள் பல ரகத்தில்
மேனியிலே பாட வேண்டாம்!
இனிமேல் உடையுடுக்க
எண்ணும் போது எல்லாம்,
தனிமேல் தெரியா வண்ணம்
தயவுடன் சேலை கட்டு! (பொ-ஏ)

# குறும்புப் பையனும் வயோதிப மனிதனும்

## GRAZY BOY & THE OLD MAN

அந்தப் பிரமாண்டமான வீட்டின் முன்பு நின்று, போவோர் வருவோருக்கெல்லாம் குறும்புத் தனங்கள் செய்து விளையாடிக் கொண்டிருந்தான் ஒரு பையன்!

பையன் எறிந்த கல்லொன்று ஒரு பெரியவரின் காலில் வந்து தாக்க. கோபம் கொண்ட அப்பெரியவர் அவனிடம் சென்று

''டேய் வீட்டில் அப்பா இருக்கிறாரா?'' என்று கேட்டார்

''ஆம்'' என்று பதில் தந்தான் பையன்,

''அம்மா இருக்கிறாவா'' என்றார்.

''ஆம்'' என்றான் பையன்

உடனே அவர் வாசலுக்குச் சென்று அழைப்புமணியை அழுத்தி வீட்டிலுள்ளோரை அழைத்தார்.

வீட்டில் இருந்து ஒரு இளமங்கை கதவைத் திறந்து கொண்டு வந்தார்

ஆத்திரம் மேலிட, ''என்னம்மா! குழந்தை வளர்க்கிற இலட்சணமா இது? போவோர் வருவோருக்கெல்லாம் கல்லால் எறிந்து கொண்டிருக்கிறான் நீங்கள் கவனிக்காமல் இருக்கிறியளே...'' என்று படபடப்புடன் கேட்டார்.

வியப்புடன் பையனை நோக்கிய அப்பெண் ''ஐயோ,! அது எங்களுடைய பிள்ளை இல்லைங்க அது வேறு யாரோ பெடியன்—'' என்றவாறே கதவைச் சாத்தி விட்டு உள்ளே போய்விட்டாள்.

அசடு வழிய வந்த பெரியவரைப் பார்த்து இரசித்துக் கொண்டு நின்ற அப்பையனைக் கண்டதும், அவருக்கு மிகவும் கோபம் வரவே, அவனை நெருங்கி

டேய்! செய்யிறதையும் செய்து போட்டு பொய் கூட சொல்லுறாய் என்னடா''

என்று அடிக்க கையை ஓங்கினார்.

ஏன் சார்! அது என்னுடைய வீடென்றா சொன்னனான்... நீங்கதானே கேட்டீங்கள், அப்பா, அம்மா இருக்கினமா? என்று என் அப்பா அம்மா உண்மையிலேயே எனது வீட்டில் தான் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் போய் கேட்ட வீடு என் வீடு இல்லையே! என் வீடு அதோ அங்கு இருக்கிறது.'' என்று கூறியவாறே தனது குறும்புக்களைத் தொடர்ந்தான் பையன். -டோ


தீபம் சுடர்விட, பாபம் பறந்தோட
தெய்வத்தைப் பணிந்து
தெரிவிக்கின்றோம் நல்வாழ்த்து!



த ஜீவல் சொப்
THE JEWEL SHOP

பழைய செம்பு, வெள்ளி, தங்க நாணயங்கள், ரூபா நோட்டுக் கள் நல்ல விலையில் விற்றிட சிறந்த இடம்
117-119 சதாம் வீதி, கொழும்பு 1
தந்தி : லாங்க்பியர்ஸ்

இதயம் கனிந்த, இனிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள்!

ஸ்ரீ சரஸ்வதி ஸ்ரோர்ஸ்
வாசனைத் திரவியங்கள், மற்றும் உள்ளூர் விளைபொருட்கள் விற்பனையாளர்கள்.
48, ஓல்ட் மூர் ஸ்ரீற் கொழும்பு 12

பாபம் அழிந்திட பூமி சிறந்திட
தீபம் சுடர் விடும். தீபத் திருநாளிலே,
வாடிக்கையாளர்களுக்கு எமது
வாழ்த்துக்கள்

ரி. எஸ். ரி. பி. ரி. அன் கோ.
T. S. T. P. T. & Co.
49, டாம் வீதி, கொழும்பு 12
போன் 31035



# படுக்கையிலே கிடந்துகொண்டு பக்குவமாய் பேசி; பல்லிளித்துக் காட்டியென்னை கேட்கின்றாள் மனைவி !

தீவாளி நெருங்கிட நெஞ்சமே பதறுது,
 தேதியைக் கிழித்திட தேகமே உதறுது!
ஆவியே சோருது! அகமெல்லாம் வாடுது!
 ஆண்டவா! என்னையே அவனியில் காத்திடு!

கொம்பனி யொன்றினில் தொத்தியே கொண்டு,
 கன காலம் வேலை செய்கிறேன் அங்கு,
சம்பள உயர்வினைக் கேட்கவே அன்று,
 ''சரி வெளியே போ!'' என சொல்கிறாரின்று!

கும்ட்டுக் காலினில் வீழ்ந்தங்கு எழுந்து,
 அம்பிட்ட சம்பளம் வாங்கிறேன் நன்கு!
சம்பளம் போதாது, சம்சாரம் தாளாது!
 கும்பிட்டு வருகிறேன், கடவுளே காத்திடு !

அடுத்த வீட்டன்னம்மா அவசரமாய் நேற்று
 அழகான சேலையொன்றைக் கள்ளமாக வாங்க,
படுக்கையிலே கிடந்துகொண்டு பக்குவகாய் பேசி
 பல்லிளித்துக் காட்டியென்னை கேட்கின்றாள் மனைவி!

கொடுக்க மறுத்துவிடின் கொடுப்பாளா முத்தம்?
 அடுத்த குழந்தையினை தடுப்பதவள் சித்தம்!
விடுத்த வேண்டுகோளின் விலையுமன்றோ மொத்தம்!
 எடுத்த சம்பளமும் போதுமாமோ நித்தம்?

''வயதிப்ப ஏழாச்சு, வடிவான சேர்ட்டு''
 வேண்டுமென்று அழுகின்றான் விம்மலுடன்
 [விஜயன்
கையில் கிடந்ததெல்லாம் கரைஞ்சேதான் போச்சு!
 பையில் பணமில்லை, கடனெல்லாம் ஆச்சு!

''சீத்தைப்பூப் போட்டால் சிரிப்பார்கள் பெண்கள்,
 பற்றிக்தான் வேணும்!'' புலம்புகிறான் பையன்,
சோறுண்ண மாட்டேன்! சீத்தையை நாடேன்!
 வேறேதோ கேட்டு வேண்டுகிறாள் மாலா!

கால்முட்டக் காற்சட்டை கட்டாயம் வேணும்
 மேல்முழுக்க பூப்போட்ட மினிஸ்கேர்ட்டு காணும்
பால்வடியும் பாலகர்கள் வாய்விட்டுக் கேட்க,
 தேள்கடித்த திருடன்போல் தவிக்கிறேன் நானும்!

அரக்கனன்று இறந்துபோக வருகின்ற தினத்தால்
 வரும் துன்பம் யாரறிவார் வையகத்தில் இன்று?
சீரழிந்த வாழ்கையிது சீர் பெறுவதென்று?
 சிறியேனைக் காத்திடு கண்ணா நீ இன்று!

தேவாதி தேவரைக் காத்திட்டாய் அன்று,
 தீவாளி நேரத்தில் காத்திடு என்னை!
தேவாரம் பாடியே துதிக்கிறேன் இன்று,
 தீவாளி தினத்தையே நிறுத்திடு கண்ணா!



# இதுதான் முதல் இராத்திரி

சுமதி : ''என் கணவரால் இரவில் என்னால் தூங்கவே முடிவதில்லை''

நளினி : ஐயையோ...! ஏன்டி?

சுமதி : ''அப்பிடியொண்டும் இல்லையடி, என் கணவரின் குறட்டை என்னை தூங்க விடுவதேயில்லை !''

நளினி : ''அப்பாடி! அப்பிடியொரு தொல்லை எனக்கு இன்னும் இல்லை!''

சுமதி : ''ஏன்டி, உன் கணவர் குறட்டை விடுவதில்லையாடி?''

நளினி : ''எனக்கெப்பிடியடி தெரியும் ? எங்களுக்குத் திருமணமாகி ஒரு வாரம் தானே ஆகிறது .. அதற்குள் என்னடி தூக்கம்!''

# இரத்தக் கண்ணீர்!

ஒருவர் : என்ன கண்ணெல்லாம் சிவந்திருக்கின்றது!

மற்றவர்: ''இரத்தக் கண்ணீர்'' படம் பார்த்தேன் அதுதான்.

— கலா —
மானிப்பாய்

நாடு செழித்திட
 நாளும் உழைத்திடும்
நல்லவர் நலம் காண
 நாமும் வாழ்த்துகிறோம்

## பீப்பிள்ஸ் ரேட் சப்பளைஸ்

## PEOPLE'S TRADES SUPPLIES

நெல் அரிசி தானிய வகைகள்
உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்
விற்பனையாளர்கள்.

143, மெலிபன் வீதி,
112, 4-ம் குறுக்குத் தெரு, } கொழும்பு—11

தொலைபேசி | 25389 23509

உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள்

# பல் சுவை தரும் பத்திரிகைச் செய்திகள்



- டோ

உற்ற நண்பன் 'மாவோவை' இழந்துவிட்டோம் என்றும் மறவோம். —ஸ்ரீமாவோ—

※ மறக்க முடியுமா? ※

யாழ்ப்பாணமும் இலங்கையின் ஒரு பகுதிதான் —ஸ்ரீமாவோ—

※ நெஞ்சம் மறப்பதில்லை ※

நான் உயிர் தப்பியது முருகன் அருளாலே.

※ கந்தன் கருணை ※ அருளம்பலம் M.P.

அரசுக்கு கூட்டணி 3 நாள் அவகாசம்.

※ சவாலுக்கு சவால் ※

புரட்சி முலம் 26வது வயதில் நாட்டைக் கைப்பற்றியவர் —கடாபி—

※ அவன்தான் மனிதன் ※

அரசு சார்பு எம். பி. பெயர் சொல்லி லஞ்சம் வாங்குகிறார்களாம்.

※ அலிபாபாவும் 40 திருடர்களும் ※

தென்கொரிய அணுவாயுத தளம் அகற்றுமாறு இலங்கைப் பிரதமர் கோரிக்கை.

※ பாசம் ※

வட பகுதியில் இராணுவ வீரர்கள் குவிப்பு.

※ பாதுகாப்பு ※

கூட்டுச்சேரா மகாநாட்டு தலைவர்களுக்கு பிரதமர் விருந்து.

※ பாலும் பழமும் ※

தவறணைகளில் மண்டியுடன் நீர் கலந்து விற்பனை

※ புத்திசாலி ※

வட பகுதிக்கு மகாவலி திருப்ப முயற்சி ... ... —குமாரசூரியர்—

※ நினைப்பது நிறைவேறும் ※

தமிழை அழிக்கவும் முடியாது. அழிக்கவும் விடமாட்டேன். —குமாரசூரியர்—

※ எடுப்பார், கைப்பிள்ளை ※

வாலிபர்களை கேலி செய்த 7 பெண்கள் கைது. (கிறேஸி கேர்ல்ஸ் & பணி போய்)

※ கும்மாள குமரிக்கும் குறும்புக்கார பைய்னும் ※

or

வாயாடி

கட்சிக் கொடியை பச்சை குத்தினார் எம். ஜி. ஆர்.

※ நினைத்ததை முடிப்பவன் ※

800 கோடி மக்கள் எழுந்து நின்று மாவோவுக்கு அஞ்சலி.

※ தெய்வப் பிறவி ※

சாயிபாபா கடவுளா சாதாரண மனிதனா பாபாவிற்கு நரசிம்மையா சவால்.

※ அவனும் மனிதன்தான் ※

ஆளை மோப்பம் பிடிக்க பொலீஸ் நாய் தவறியது.

※ காலம் மாறிப்போச்சு ※

மக்கள் விரும்பினால் தேர்தல் பின்போடப்படும்.

※ உங்கள் விருப்பம் ※

3 பேரை மோதிய இராணுவ ஜீப் சாரதி பொலீசில்.

※ அனுபவி ராஜா அனுபவி ※

நியாய பூர்வமான விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமாகாது. —கடாபி—

※ நாலுந் தெரிந்தவன் ※

தமிழினத்தின் ஒரு உயிர்கூட வீண் பலியாகக் கூடாது. —செல்வா—

※ உயர்ந்த மனிதன் ※

### ★ அறிவாளி ★

நேர்ஸரி ஸ்கூலுக்குச் செல்லும் மகனிடம்

தந்தை : 'தம்பி', உங்கடை ரீச்சருக்கு என்ன பெயரடா?

மகன் : 'குட்மோணிங் ரீச்சர்' அப்பா,

தந்தை ; என்னடா? என்னடா?

மகன் : ஓமப்பா எப்பவும் ரீச்சர் வகுப்புக்கு வந்தவுடனே எல்லாப் பிள்ளையளும் அவவை 'குட்மோணிங் ரீச்சர்' எண்டுதான் கூப்பிடுவினம்.

தந்தை : ......! ? .. ... —மிஸ்கே—

எனது தலைமைப் பதவியை ஒரு இளைஞனிடம் கொடுத்து நான் ஒதுங்கிக்கொள்வேன். —ஜே ஆர்.—

※ ஆயிரத்திலொருவன் ※

யாழ்ப்பாணத்தில் கூட்டங்கள் ஊர்வலங்களுக்குத் தடை.

※ சங்கே முழங்கு ※

தமிழ் இளைஞர்கள் எங்கே சிறை வைக்கப்பட்டுள்ளனர், விபரம் கோரி எஸ். ஜே. வி. பிரமருக்கு தந்தி.

※ பந்த பாசம் ※

முன்னரும் நான் பயப்படவில்லை, இனியும் பயப்படப்போவதில்லை. —பிரதமர்—

※ பெண் என்றால் பெண் ※

தர்ம யுத்தம் என்றும் தோற்றதில்லை. —இராஜதுரை—

※ சபாஷ் தம்பி ※

புகையிரத நிலையத்தில் இளைஞர்கள் மத்தியில் சிக்கித் தினைத்தார் அமிர்.

※ அன்புக்கோர் அண்ணன் ※

திருமணம் முடிப்பதாகக் கூறி குழந்தை பிறந்ததும் என்னை மறந்துவிட்டார் என் காதலன். —கோட்டில் இளம் பெண்—

※ பத்துமாத பந்தம் ※

துன்பப்படும்போது ஒராயிரம் முறை கடவுளை நினைப்பதைவிட இன்புறும்போது ஒருமுறை நினைப்பதே மேல்

# ஆய்ச்சிக்குட்டிக்கு வரச்ச மாப்பிள்ளை!

C. S. பாஸ்கர்

இதுவரை

ஆறுமுகத்தார், ஆச்சிக்குட்டி தம்பதிகளுக்கு கண்ணன் என்ற ஒரு மகனும், ராணி என்ற ஒரு மகளும் இருக்கின்றனர்.

இங்கிலாந்தில் இருந்து ஆறுமுகத்தாருக்குத் தெரிந்த, ஒரு தாய் தந்தை அற்ற சம்பந்தன் எனுற ஒரு இன்சினியர் பையன் அவர்கள் வீட்டில் வந்து தங்கி, ஒரு திருமணம் முடித்துக்கொண்டு போக வருகின்றான்.

**காட்சி: 2** **பகுதி: 2**

ஆ. கு; ''சும்மா கிடவுங்கோ! எந்த நேரம் பார்த்தாலும் சும்மா, சுடுதண்ணிபட்ட நாய் மாதிரி பிள்ளையைப்பற்றிச் சொல்லுங்கோவன் (சாடை காட்டுதல்)

ஆறு: ''நல்லாச் சமைப்பள்! வீடு வாசல் கூட்டி துப்பரவா வைப்பள்! தோய்ப்பள்! ஆச்சிக்குட்டி! சரிதானே''

ஆ. கு: ''திறமாப் பூப்போடுவாள் ! சட்டைக்கு! படிப்பும் பிறம்பா நடக்கிது தம்பி! எங்கடை பிள்ளை ஆடினளெண்டால் ஒரு பிள்ளை ஆடமாட்டினம் .. சும்மா சோக்கா சுழன்டு ஆடுவள்''

''என்ன ஆடுவளோ? றொக்கன் றோல், சாச்சா (cha, cha) ருவிஸ்ற் (Twist) எல்லாம் ஆடுவா?''

ஆறு: ''சாச்சாய்! உந்த இழவு ஒண்டுமில்லை. எங்கடை பரத நாட்டியம்தான்''

மாப்: ஓ பரத நாட்டியம்! எனக்கு நல்ல விருப்பம்! (I like it very much)

ஆ. கு; ''உங்களுக்கு விருபபமோ? லண்டனிலே ஆடுறேல்லையோ?''

ஆறு: ''எடியேய்! எங்கடை கலாச்சாரமான அந்த நாட்டியத்தை எங்கடை ஆட்களே, ஆடுறது குறைவு! பார்த்து இரசிக்கிறது குறைவு! அங்கை யார் ஆடப்போயினம்? அங்கை தம்பி சொல்லுற கீச்சு மாச்சுகள் எல்லோ ஆடுவினம்''

மாப்: ''Uncle! அங்கும் சில விடங்களிலை பழக்குறவை தான் இப்ப வெள்ளைக்காரரெல்லாம் அந்தக் கலையை விரும்பி படிக்கினம்.''

ஆறு; ''உவள் ஆச்சிக்குட்டியை அந்த நேரம் பழகச் சொன்னனான் இவள் கேட்டாளெல்லோ.''

ராணி; உள்ளிருந்து) ''ஆச்சி இஞ்சை ஒருக்கா வாணை! இதை யொருக்கா, மாட்டி விடணை''

மாப்: ''Uncle! அது யார்? என்னது மாட்டுறதாம்''

ஆறு; ''அது என்ரை மேள்தான்! தாயும் மேளும் எக்கச்சக்கமான சட்டை ஒண்டைத் தீவாளிக்குத் தைச்சுப்போட்டு... அடுத்த வீட்டுப் பெட்டை அவசரத்திற்கு தங்கச்சியாற்றை சட்டையை மாட்டிக்கொண்டு போக அதைப்பார்த்திட்டு அதுதான் ஏதோ பாசன் எண்டு விட்டு இவளவை தாயும் மேளுமாகச் சேர்ந்து ஒரு சட்டையைத் தைச்சு .. சுவனம் பிள்ளை... பிரிஞ்சு போகும்''

ஆ கு: ''இந்தாருங்கோ! சேட்டு முதலிலை இதைப் போடுங்கோ (சேர்ட்டை ஆறுமுகத்தாரிடம் கொடுத்தல்)

ராணி! மெதுவாகப்போடு! தம்பி இஞ்சைதானே நிக்கப் போருர்...''

(ஆறுமுகத்தார் சேட்டை வாங்கி வளம் மாறிப் போட்டுக்கொண்டு)



ஆ. மு: ''குறுக்காலை போவான்! சேர்ட்டு விலைக்கு அஞ்சு ரூபாவைக் குறைச்சுத்தா, எண்டு அவன் கடைக்காரனைக் கேட்க, அவன் அஞ்சு ரூபாவைக் குறைச்சுக்கொண்டு, அதுக்குப் பதிலா, சேட்டிலை கிடந்த பொத்தானுகளைக் களட்டிப் போட்டான் போலை!''

ஆ. கு: ''ஐயோ! சேர்ட்டை வளம் மாறிப் போட்டிட்டியள்!''

ஆறு: ''அதையேனப்பா சொல்லிக் காட்டுகிருய்'' (களட்டிப் பூட்டிக்கொண்டே)

தம்பி! இலண்டனிலை இப்ப எப்படி? மரக்கறி விலை ஏத்தமோ? செத்தல் என்ன விலை போகுது''

(ராணி றைட்சுடன் வர' மாப்பிள்ளை வியந்து பார்த்தவாறே)

மாப்: ''Uncle!''

ஆறு: ''தம்பி: மாமா! மாமா! எண்டு தமிழிலை கூப்பிடும் அப்பதன் இஞ்சத்தையில் சனங்களுக்கு என்ரை அருமை விளங்கும்!''

மாப்: ''Yes மாமா! இது உங்க Daughter ஆ?''

ஆ. கு: 'டொக்டரோ?''

ஆறு: ''இல்லைத்தம்பி! எங்கடை மேள் ..''

மாப்: ''ஆ! உங்க மகளா?''

ஆறு: ''ஏன் சந்தேகமாக் கிடக்கோ? வேணுமெண்டால் பிள்ளையைக் கேட்டுப் பாருமன்!''

மாப்: ''அதுக்கில்லை! She is very baautiufu! நல்ல அழகா இருக்கிறு, அதுதான்''

ஆ. கு: ''என்ரை மேள் எல்லோ... பிள்ளை எப்படியிருப்பள்?

ஆறு: தம்பி! என்ரை மனிசியும் ஆர் இவ, ஆச்சிக்குட்டியும் மூந்தி சோக்கான வடிவு! இப்ப எல்லோ இப்படிக் கொட்டிண்டு போரு

ஆ கு: ''பிள்ளையைப் பாரும் தம்பி! சும்மா வெட்கப் பட்டுக்கொண்டு கீழை பார்த்தபடி நிக்கிது... என்ரை பிள்ளை எல்லோ ..''

(14 ம் பக்கம் பார்க்க)

ஓ இதயமென்பது விசாலமாக இருக்கும்: ஆனல், அதை இன்னொருவருக்கு அளித்த பின்னர் சுருங்கி விடும் (வசந்த மாளிகை) ஓ

★ எழுதிய நோட்டுக்கள் செல்லாது சிவனே !

★ **Oh!** சிவனு ! வெல்கம் ! வெல்கம்!

★ குருமாருக்கு ஆசனத்தில் மீனுடன் பிரயாணி

# சிவனுடன் சிலமணி நேரம்



சரஸ்வதி பூஜை. அமளி துமளி கோயிலொன்றின் முன் நின்று ஒரு நன்பனை (ஆண் நண்பர்தான்) வருகைக்காக எதிர்பார்த்திருக்கிறேன். ஒரு பக்தர் விழுந்தடித்துக்கொண்டு உண்டியலுக்கு அருகில் செல்கிருர். அங்குமிங்கும் பார்க்சிருர். மடியில் இருந்து சில ரூபா நோட்டுக்களை எடுத்து உண்டியலுள் செருகுகிருர். அதையே பார்த்த வண்ணம் நிற்கிறேன்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டபடி என் பின்னுலொருவர். திரும்பிப் பார்க்கிறேன்,

'அடடா சிவனு'......

வெல் கம் வெல் கம்

சமாளிக்காதே தீசா இப்போ ஒரு பக்தன் செய்த செய்கையைப் பார்த்தாயா ?
ஒ ! அந்த பணம் உண்டியலுக்குள் போட்ட பக்தரா ?

ஆம் தீசா......

அழுவதா ...... சிரிப்பதா ......

ஏன் தீசா

சிவனே உங்களுக்கு கதையே தெரியாது போலிருக்கு;

தற்பொழுது எழுத்துக்கள் கிறுக்கப்பட்டிருக்கும் ரூபா நோட்டுக்கள் செல்லுபடியாகாது.

ஒ மை காட்

oh my God

சிவனே உங்களுக்கு

மேலும் ஒரு கடவுளா ?
இல்லையில்லை பூலோகத்தில் சில பக்தர்கள் கூறுவதுபோல நானும் கூறிவிட்டேன்.

அப்போ அந்தப் பக்தர் போட்ட பணம் பெறுமதியற்றதா?

கிட்டத்தட்ட அப்படித்தான்.

என்ன அப்படி எழுதியிருக்கிருர்
யாமிருக்கப்பயமேன் என முருகன் கையால் அபயமளிப்பதுபோல் முன்னைய பிரதமர் மறைந்த திரு. பண்டாரநாயக்கா அவர்கள் 50, 100 ரூபா நோட்டுக்களில் கையை உயர்த்திப வண்ணம் இருக்கின்டு. அதில் ஏதோ எழுதிவிட்டார்களாம்,, அது தான்.

ஏன்... எழுதுவதுக்கு வேறு ஒன்றுமில்லையா ! ......

பேப்பர் தட்டுப்பாடு......

சுவர்களிய் எழுதினல் குற்றம்.
அதுதான் ரூபாய்களில் எழுதுகிருர்களோ தெரியாது சிவனே !

''வான் முகில் வாளாது பெய்க''
ஒலிபெருக்கியல் தேவாரம் ஒலிக்கிறது.

தீசா என்ன இருந்தும் பக்தர்கள் தேவாரம் பாடுவதை நிறுத்தவில்லை. பார்த்தாயா ?

என்ன பையன் !

வான் முகில் வாளாது பெய்க,
பக்தர்கள் படிக்கத் தவறவில்லை. ஆனுல், மழைதான் பெய்யவில்லை.
ஒலிபெருக்கியில் பாடசாலையொன்றில் நடைபெறும் சரஸ்வதி பூஜை தொடர்கிறது.
அன்னக்கிளி... ஒன்னைத் தேடுது... கண்களிரண்டும்... என் காதலி யார் சொல்லவா...
நத்தையென ஊர்ந்து நடக்கின்ருர்...
விறைத்துப்போய் நின்ருர் சிவன்.

தீசா இங்கு யாராவது சமய குரவர்கள் பிறந்திருக்கிருர்களா ?

என்ன சிவனே உங்களுக்குற் தெரியாதா?
பாடசாலை சரஸ்ைதிபூஜைகளில் என்ன புதுப் பாடல்களெல்லாம்,

ஒ .. அதுவா

அது தேவாரமில்லை, அதுதான் சினிமாப் பாடல்கள்... பொப் பாடல்கள்.
இவைகள் இல்லாவிட்டால் விழாக்கள் சோபிக்கமாட்டாது. முன்னர் திருஞானசம்பந்தர் 3 வயதில் தேவாரம் பாடினுர், இப்போ 1½ வயதிலேயே பிள்ளைகள் பொப் பாடுகிருர்கள்.
சிவனே,

காலம் போகிற போக்கில் மக்களும் போகிருர்கள் நீங்களும் அவற்ருேடுதான் ஒத்துப் போகவேண்டும். அல்லது கஷ்டம்தான்.

## சிவனிடம்சிலமணி ...

எனக்கே அட்வைஸ் பண்றியா நீசா உங்கள் மகன் முருக னின் 'அட்வைஸ்' கேட்ட நீங்கள் என் 'அட்வைஸ்' கேட்டா லென்ன?

இடத்தைவிட்டு செல்கிறோம்.
சிவனே! ஒரு முக்கிய விடயம்

இந்த பஸ்ஸில் நான் செல்லவேண்டும், யாழ் பஸ் நிலை யத்தில் நின்ற கொடிகாம பஸ்ஸில் ஏறுகிறேன். தொடர் கிறார் சிவன்.

சனம் நிரம்பி வழிகிறது

டிங் டிங் . டிங்... டிங் .

டிரைவரைக் காணவில்லை

டிங் .. டிங் . பொறுமை இழந்த மக்கள் அறம்புறமாக C. T. B. யை திட்டுகிறார்கள்.

ஸப் ஒரே புழுக்கம் நீசா இதேபோல எத்தனை கஷ் டங்களைப் படுகிறார்கள் மக்கள் இது உங்களுக்கு எங்கே தெரியப்போகுது.

பஸ் புறப்படுகிறது. பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்ட பகுதியை சால்வையால் மறைத்து விட்டு இருவர் உட்கார்ந்திருக்கின்றனர். குருமாருக்கு என ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் ஒருவர் மீனும் இன்னொ ருவர் களுக்துறையிலிருந்து தருவிக்கப்பட்ட சுத்திகரிக் கப்பட்ட தண்ணீரும் (டபிள் R) வைத்துக்கொண்டிருக் கின்றனர்.

ஒருவர் விட்ட சிகரெட்புகை புகைக்காதீர் என்ற விளம் பரப் பலகையை மறைத்து செல்கிறது

அந்தக்காலத்து புதுமணப் பெண்போல இந்தக்கால மணமுடித்த ஆண்போல அமைதியாக நிக்கிறார் சிவன்

சிவனே அரிது அரிது மானிடராக பிறத்தல் அரிது என்று ரெருவர். இந்த அரிய பிறப்புக்களின் கூத்துக்கள் எப்படி முன்னுக்கு போங்கோ ..

இந்தச் சனியனோட நாங்கள் படுற பாடு.
வீடுவாசல்லே வேலையில்லே .. வெளிக்கிட்டுடிவம் நடுவிலே அந்தச் சடையோட நிக்கிறான் முன்னுக்கு போப்பா

இந்த சாமியன் இப்பிடித்தான் போடுறது சாமிக்கோலம் குடிக்கிறது பிக்பொக்கட்அடிக்கிறது முன்னுக்கு போங்கோ சிவனே! நக்கீரரை கண்டுல் எரித்திராம் அதொன்றும் இலகு வாயாது இங்கு ட்றைவர் கொண்டக்டா வைத்தது தான் சட்டம்

சாமியார் எனப் பேசியது சிவனைதான்

சிவனே! சாமியார் கோலம்போட்டு சிலர் குடித்து கூத் தாடி பண்ணும் கூத்துக்களால் ஒரிஜினல் சுவாமிகளுக்கே மதிப்பில்லை பார்த்திரா சிவனே!

உலகே மாயம் வாழ்வே மாயம் மனதுள் முணுமுணுத் தார் சிவன்


கையில் ஒருகொப்பி— தொப்பி போன்றவற்றுடன் 3 கன் னியர்கள் ஒரு சீற்றில்2பேர் உட்கரர்ந்திருக்கின்றனர். ஒரு வர் நிற்கிறார்.

எடியே சகுந்தலா விசரியெடி முந்தி லவ்பண்ணிய 'லவ்வ ரை' விட்டிட்டு இப்ப வேறை யாரையோ லவ்பண்ணுகிறா.

முந்தின லவ்வர் இப்ப ஜேர்மனியில் இருக்கிறாளும்

எனக்கு தெரிந்திருந்தால் நான் அவளை லவ்பண்ணியிருப் பன். கதை சுவராஸ்பத்தில் மூழ்கியிருக்கிறேனை.

இந்த பஸ்ஸில் நான் வரவில்லை என்றவண்ணம் இறக்கப் போகிறார் சிவன அவரைத் தொடர்கிறேன் தான்.



வளரும் கலைஞர் பொப்பிசையரசு ரமேஷ் வைகுந்தவாசன் அவர்கள் தனது அன்பர்கள், அபிமானிகள் ஆதரவாளர்கள், இரசிகப் பெருமக்களுக்கு தனது மனம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை கலகலப்பு மூலம் தெரியப்படுத்துகிறார்.

0 0 0 0

பண்டார நாயக்கா ஞாபக தினத்தை முன் னிட்டு ஜனசக்தி சனசமூக நிலையத்தினரும் விவசாயக் கழகத்தினருமாக சிரமதான மொ ன்றை மேற்கொண்டனர்.

0 0 0 0

யாழ் லியோ கழகமும், இ. வி. ஒன்றியமும் இணைந்து நடாத்திய விவசாயக் கருத்தரங்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் இடம் பெற்றது. லியோ கழக ஆலோசகர் திரு. ஞானம் அவர்கள் பாடசாலை எல்லையினுள் பழமரக் கன்றுகளை நாட்டினார்.

முள்ளியவளை இ. வி. கழகத்தைச் சேர்ந்த கே. வி. சிதம்பரநாதன மேற்படி விழாவில் கலந்துகொண்டார்

தகவல்: C. S. பாஸ்கர்

(11ம் பக்கத்தொடர்ச்சி)

ஆறு: ''ஆச்சிக்குட்டி! இஞ்சாரும், பிள்ளை வெட்கப் பட்டுக்கொண்டு நிக்கேல்லை... நிமிர்ந்து வசதி யாக நிக்க, குறுக்காலை போன உந்தச் சட்டை விட்டாலெல்லோ காத்தும் போகாது... இரத் தோட்டமும் பிரேக்கடித்தபடி அந்தந்த இடத் திலை நிக்கும்

மாப; ''மாமா ஒரு விசயம்! நீங்கள்? ஏன் தலைக்குப் பின்னாலே குடும்பி வைச்சிருக்கிறியள்''

ஆறு: ''முன்னாலே வைச்சா வடிவில்லைத் தம்பி! கண் ணையும் மறைச்சுப்போடும்! அதுதான் பின்னாலை வைச்சிருக்கிறன். எப்படி திறமா இருக்கோ... அது கிடக்கட்டும் தம்பி! லண்டனிலை சாப்பாடு கீப்பாடு.. மலிவாய்க் கிடைக்குமோ? இடியப் பம், பிட்டுக் கிட்டெல்லாம்...''

மாப்: ''ஓ.. எடுக்கலாம்! ஆனால் தேங்காய்ப்பூத் சரியான விலை''

ஆ. கு: ''தேங்காய் விலையோ? அப்ப தம்பி லண்ட னுக்குப போகக்கை ஒரு நூறு தேங்காய் கொண்டு போமன்...''

ஆறு; ''ஏன்? முறிகண்டி இப்ப அங்கையே கிடக்கு'' அப்ப தம்பி, அங்கை புட்டு அவிச்சு விக்கிறாங் களா? எப்படித் தம்பி அங்கத்தையில் குழலுகள்?

மாப: ''எனக்குத் தெரியாது I don't Know''

ஆறு: ''உதுகளைப் பார்க்காமல் அங்கை வேறை என்ன செய்தனீர்?''

ஆ. கு: ''உங்களுக்கென்ன விசரே! தம்பி, லண்ட னுக்கு உதுகள் பார்க்கவோ? படிக்கவோ போன வர்?''

மாப்: ''உதுகளுக்கு அங்கை நேரமில்லை! ஒரே படிப்பு! வேலை! வேலை!''

ஆறு: ''ஓ ஓ இஞ்சினியரெண்டால் சும்மாவே எவ்வளவத்தைச் செய்ய வேணும்''

ஆ. கு: ''அதுதானே! எத்தனை இஞ்சினுகளைக் கழட் டிப் பூட்ட வேணும்''

மாப்: 24 hrs too, Busy தான்! ஓம் அங்கிள்! 24 மணி த்தியாலமும் வேலைதான்!''

ஆறு: ''அப்ப தம்பி ஓவர் ரைம் இல்லையோ?''

ஆ. கு: ''என்ரை மேளும்.. ஆர் பிள்ளை ராணியும் எந்த நேரம் பார்த்தாலும் படிச்சபடிதான்... சம்பல் அரைக்கேக்கை சரித்திரப்புத்தகம்!''

ஆறு: ''கூட்டேக்கை குடியியல் புத்தகம்!''

ஆ. கு: ''படுக்கேக்கை பொது விஞ்ஞானப்புத்தகம்''

ஆறு: ''தோய்க்கேக்கை தேவாரம் பாடமாக்கினபடி தான்''

ஆ. கு: ''ஓ... உங்காலை பொன்னம்மாவின்ரை பெட் டை இருக்கிறாளே... அவள், கத்தரிக்காய் வெட் டிக்கொண்டு... 'கண்கள் இரண்டும் என்று உம் மைக் கண்டு பேசுமோ? வேறு என்னவோ'' எண்டு ஏதோ இழவுப்பாட்டைப் பாடியபடி இருப் பள் ஒரு கையிலை அரிவாள் வெட்டிப்போட் டுது... எங்கடை பிள்ளை கண்டகண்ட விசர்ப் பாட்டுகள் எல்லாம் படிக்கிறதேயில்லை...''

ஆறு: ''என்ரை மனுசிக்கு தன்ரை மேளையும் ஒரு இஞ்சினியினி ஆக்க வேணுமெண்டு ஒரே ஆசை... பிள்ளையின்ரை உடுப்பு அரை குறை யெண்டாலும் நல்ல அறிவு!''

ஆ. கு: ''என்னைப் போலைதான்''

ஆறு: ''ஓ! பேந்தென்ன அறிவு தலையாலை வழி யுது...''

மாப்: ''இப்ப லண்டனிலை அனேகமான இலங்கைப் பெண்கள் எல்லாரும் வேலை செய்யினம் இப்ப உங்க மகளும் லண்டனுக்கு வந்தால் வேலை எடுக் கலாம்''

ஆறு: ''ஓ! நீங்கள் எடுப்பியள்.. உங்களுக்கு இல் லாத செல்வாக்கே ''

ஆ. கு: ''வடிவேலா! என்ரை மேளையும் கப்பலிலை ஏத்திப்போடு''

மாப்: ''Who is that வடிவேலு?''

ஆறு: முருகன்! முருகன்! நீர் மறந்திருப்பீர் முரு கனை.. தம்பி லண்டன் தம்பி. வாரும் உள்ளை... ராணி வாய்க்கைத் தூக்கு.. பக்குவம். பக்கு வம்.. தம்பி மெதுவா வலது காலைத் தூக்கி படி யிலை வைச்சு உள்ளை போம்...

உவன் எங்கை எங்கடை பொடியன் போட் டான் இண்டைக்கு ஏதேன் புதுப்படமோ? (அனைவரும் உள்ளே போதல்)

திரை.


ஆச்சிக்குட்டித் தம்பதிகளின்
அருந்தவப்புதல்வி ராணி
லண்டன் மாப்பிள்ளை சம்பந்தன்
ஆகியோரின்



விபரம் அடுத்த இதழில்

வாடிக்கையாளர்களுக்கும் வாசகப்பெருமக்களுக்கும் எமது கலகலப்பான
தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக.

க. செ. கைலாசபிள்ளை
அன் சன்ஸ்

ஆயுர் வேத மருந்து வகைகள்
கோவில் அபிஷேக திரவியங்கள் விற்பனையாளர்

76, பெரியகடை, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7135

பாபக் கறை போக்கும், பைந் தமிழர் பெருநாளில்,
தீபச் சுடரேற்றி தெய்வம் தொழுதிடுவோம்

சுத்தமான, சுவையான
உணவு வகைகள்
சூடான, குளிரான பான வகைகள்
அனைத்திற்கும்
தலைநகரில் சிறந்ததோர் இடம்

# கிறீன்லன்ட்ஸ்

ரூறிஸ் ஹோட்டல்

# GREENLANDS

Tourist Hotel

பம்பலப்பிட்டி.

வாடிக்கையாளர்களுக்கு எமது
மனமான தீபாவளி வாழ்த்துக்கள்

அனைவரும் விரும்பி வாங்கிப் பாவித்து
நன்கு பயனடையுங்கள்;

சென்றிக் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்
( சிறியது, பெரியது )
'கெஸலி' சைக்கிள்
(உறுதியான உதிரிப்பாகம் கொண்டவை)
மின்சார உபகரணங்கள் போன்றவற்றை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# நியூபோன் எலெக்ரிக்கல்ஸ்

(மின்சாரப் பொருள் விற்பனையாளரும்,
ஒப்பந்தக்காரரும் )

கிளை :— 141, 143, ஸ்ரான்லி வீதி,
440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7016

அனைவருக்கும்
எமது
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

தித்திப்பான தீபாவளிக்கு திறமையான
புடவைத்துணிகள் பெற நாடுங்கள்

# மணியப்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

16, மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7545

# தீபாபளித் திரை விருந்து

ரசிகர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

யாழ் ஸ்ரீதர் திரையில்
ஹவுஸ் புல் காட்சிகளாக
காட்சியளித்துக்கொண்டிருக்கிறது

சிவாஜி கணேசன், K. R. விஜயா, பிரமிளா
ஸ்ரீகாந், சுந்தரராஜன், V. K. ராமசாமி,
சோ, மனோரமா மற்றும் பலர் நடித்த

# தங்கப் பதக்கம்

(ஈஸ்ற்மன் கலர்)

ரசிகர்களுக்கு
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

''எந்த ஒரு பெண்ணின் அன்பையும்
பணத்தைக் கொடுத்து பெற்றுவிடமுடியாது''
இதை நீங்கள் நம்பாவிட்டால்
இப்பொழுதே சென்று பாருங்கள்

யாழ் மனோகராவில்....

A. V. M. ராஜன், சரோஜாதேவி, ராஜஸ்ரீ,
பானுமதி ஆகியோர் நடித்த

# பத்துமாத பந்தம்

( ஈஸ்ற்மன் கலர் )

யாழ் ராணி சினிமாவில்

தீபாவளி திரைவிருந்தாக
காட்சியளிக்கிறது
சிவகுமார், கமலஹாசன்,
ஜெயசுதா நடிக்கும்

# பட்டிக்காட்டு ராஜா

( ஈஸ்ற்மன் கலர் )

இதயத்தில் எழுந்து வரும்
இனிய நல் வாழ்த்துக்களே தீபத் திருநாளாம்
தெய்வத் திருநாளில்
தொழுது தெரிவிக்கின்றோம்!

எஸ். பி. என். அன் கொம்பனி

S. P. N. & COMPANY

(கமிஷன் ஏஜண்ட்ஸ்)

உள்ளூர், உற்பத்திப் பொருள் விற்பனையாளர்கள்

181, 185 கெயிசர் வீதி கொழும்பு 11

போன் - 20615

★ தீபாவளித் தினமதிலே ★ தித்திப்புச் சுவைகாண
★ தவறாது வந்திடுவீர்! ★ தீஞ்சுவை பெற்றிடுவீர்!!

சுபாஸ் கபே

SUBAS CAFE

(குளிரூட்டப்பட்டது) (Fully Air Conditioedn)

சுத்தமான, சுவையான, அறுசுவை உணவு வகைகள்,
தித்திப்புக்குன்றாத தீஞ்சுவைதரும் ஐஸ்கிறீம் வகைகள்
குளிர்பானங்கள் போன்றவற்றை ஆனந்தமாக சுவைத்திட,
உள்ளூர், வெளியூர் நண்பர்களே மகிழ்விக்க வென்றே நாடுங்கள்!

176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன் — 578

With the best Compliments from

AKRAM EXPORT AGENCY

(Exporters of Sri Lanka Products)

&

MADANI TRADING CO.

(Dealers in Textiles & Hosiery)

176, Keyzer St. COLOMBO 11

Telephone:
29678
29436

Cable:
"AKPANWALA"
"MAHFOOZ"

"தீபத் திருநாளாம்
தீந் தமிழர் பெருநாளில்,
பாபம் போக்கிட
பரமனைப் பணிந்து
போற்றி, வாழ்த்துகின்றோம்!"

★ V. R. M. Brothers ★

வி. ஆர். எம். பிறதர்ஸ்

(கமிஷன் ஏஜண்ட்ஸ்)

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனையாளர்

130, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11

போன்: 25444

இப்பத்திரிகை 68, சுந்தரபவனம், இணுவில் கிழக்கைச் சேர்ந்த இதன் உரிமையாளரும் ஆசிரியருமான (எஸ். கே. நீசன்) சீ. கேதீஸ்வரன் என்பவரால் யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவு அச்சகத்தில் பதிப்பித்து ஒக்டோபர் 20-ல் வெளியிடப்பெற்றது. J.